விலை: சதம் 75

# ஈழநாடு

THE EELANADU

மலர் 23 ஆவணி 15 ஷவ்வால் 30 இதழ் 198
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 31-8-1981

டில்கா
வாச் வேக்ஸ்
Dilka Watch Works
யாழ் நகரில் சகல மணிக்கூடுகளையும் திருத்தவும் புதிதாக வாங்கவும் விஜயம் செய்யுங்கள்.
டில்கா வாச் வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல் மாடி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8774

## கடும் சண்டை நடைபெறுகிறது

லிஸ்பன், ஆக. 30
அங்கோலாவின் தெற்கு எல்லையில் தென்னாபிரிக்க துருப்புக்களுக்கும் அங்கோலா துருப்புக்களுக்கும் இடையே கடும் யுத்தம் நடைபெற்று வருவதாக அறிவிக்கப்பட்டது.

அங்கோலாவின் தெற்கு எல்லையிலுள்ள நகரமொன்று தென்னாபிரிக்க துருப்புக்களின் கட்டுப்பாட்டிலிருந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

தென்னாபிரிக்காவின் ஐந்து யுத்த விமானங்களை சுட்டு வீழ்த்தியதாக அங்கோலா அறிவித்துள்ளது.

## அகதிகளுக்கு அரச காணி கிடைக்க அமைச்சர், எம். பி. முயற்சி

(நமது நிருபர் தமிழினியன்)
மண்டூரில் தஞ்சமடைந்திருக்கும் அகதிகளை, பட்டிருப்புத் தொகுதியிலுள்ள புட்டியம் என்னுமிடத்தில் குடியமர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அகதிகளை அரச காணிகளில் குடியமர்த்தும் முயற்சிகள் தோல்வியடையும் பட்சத்தில் தனிப்பட்டவர்களின் காணிகளில் இவர்களை குடியமர்த்த இப்பொழுது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்முயற்சியில் பட்டிருப்பு எம். பி. திரு பி. கணேசலிங்கமும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மட்டக்களப்பு கிளைத் தலைவர் திரு. ச. முருகேசு, மட்டக்களப்பு அபிவிருத்திசபை உறுப்பினர் திரு அல்பேர்ட் ஜீவரத்தினம் ஆகியோர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையே மட்டக்களப்புப் பகுதியிலுள்ள படுவான்கரை எனுமிடத்தில் அகதிகளுக்கு காணி வழங்க சில தனிப்பட்டவர்கள் முன்வந்துள்ளனர்.

34 அகதிகள் குடும்பங்கள் சொந்த இடம் திரும்ப மறுத்து இங்கு இருக்கின்றனர். இவர்களுக்கு அரச காணி பெற்றுக்கொடுப்பதில் அமைச்சர் எஸ். தொண்டமானும் முயற்சி மேற்கொண்டுள்ளார்.

## அரசு - கூட்டணி சந்திப்பு

# முடிவுகள் இன்று வெளியாகும்?

(கொழும்பு)
நாட்டில் அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்தி, தமிழ் மக்களின் நீண்டகால முக்கிய பிரச்னைகளுக்கு நிரந்தரத் தீர்வொன்றைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் அரசாங்கத்துக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குமிடையே தொடர்ந்து நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளின் இறுதிக் கட்டப் பேச்சுக்கள் இன்று மாலை ஜனாதிபதி மாளிகையில் நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து அரசு-தமிழர் விடுதலைக் கூட்டணி கூட்டறிக்கை வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரு சாராருக்குமிடையே ஜனாதிபதி மாளிகையில் இரண்டுதடவைகள் சந்திப்பு நிகழ்ந்ததும், கடைசியாக கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் 'நல்ல சூழ்நிலை' உருவானதும், முக்கியமான பிரச்னைகளில் இரு சாராருக்குமிடையே இணக்கம் காணப்பட்டதும் தெரிந்ததே.

இன்று நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளும்பொருட்டு கூட்டணிச் செயலாளர்நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் நேற்றிரவு கொழும்பு வந்து சேர்ந்தார்.

நிலைமை இவ்வாறு இருக்க, நேற்று பிற்பகல், கூட்டணியின் நல்லூர்க்கிளை அலுவலகத்தில் நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்தில் அரசு—கூட்டணி சந்திப்பு பற்றி ஒரளவு ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

இக்கூட்டத்தில்; செயலாளர்நாயகம் திரு அ. அமிர்தலிங்கம், யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், கோப்பாய் எம். பி. திரு. எம். ஆலாலசுந்தரம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## விக்கிரமசிங்காவின் பூதவுடல்: சோவியத்கம்யூ.கட்சியின் தலைமை அலுவலகத்தில் மக்கள் அஞ்சலி

### வியாழன் கொழும்புக்கு கொண்டுவரப்படும்

(கொழும்பு)
மாஸ்கோவில் காலமான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்காவின் பூதவுடல் வியாழக்கிழமை பிற்பகல், விமானம் மூலம் இலங்கைக்குக் கொண்டுவரப்படும்.

இவரின் பூதவுடல் புதன்கிழமை மாஸ்கோவிலுள்ள சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். சோவியத் தலைவர்கள் பலரும் இவரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவர்.

வியாழக்கிழமை இலங்கைக்கு கொண்டுவரப்படும் இவரின் பூதவுடல் கொழும்பு கொட்டாஞ்சேனையிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

இறுதிச் சடங்குகள் மாத்தறையில் செப்டம்பர் 7ம் திகதி நடைபெறும்.

## மங்களகரமான திறப்புவிழா

நிகழும் துன்மதி வருடம் ஆவணித்திங்கள் 15ம் நாளான இன்று காலை 10 மணிக்கும் 11 மணிக்கும் வரும் சுபமுகூர்த்தவேளையில் (31-8-81 திங்கட்கிழமை) எமது புதிய கிளை நிறுவனம் திறந்துவைக்கப்படுமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உங்களுக்கு தேவையான சகல இரும்புப் பொருட்களுக்கும், கட்டிட உபகரணங்களுக்கும், பெயின்ற்வகைகளுக்கும் நியாயமான ஸ்தாபனம்:

# பாஸி ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

30, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். போன்: 304 - 259.

இவ்வண்ணம்
கற்பகம்ஸ்
சுன்னாகம்.

0789

## "பண்டித வகுப்பு வேண்டும்"

(யாழ்ப்பாணம்)
"கல்வி வட்டாரங்கள் தோறும் பண்டித வகுப்புகளை ஆரம்பித்து நடத்த வேண்டும். தமிழ் மொழி வளர்ச்சிக்குரிய நடன, நாடகப்போட்டிகளையும் நடத்தவேண்டும்" என்று யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. கே. சிவநாதன் கோரியுள்ளார்.

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்க செயற் குழுக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

[6ம் பக்கம் பார்க்க]

உங்கள் முதலீட்டிற்கு 27% வரை

வட்டி வழங்குகின்றோம்

அத்துடன் உங்களுக்கு

★ ஆயுள் காப்புறுதி இனாம் ★ வீட்டுப்பாவனைப் பொருட்கள் (பணம் கொடுப்பனவு தவணை அடிப்படையில்)

நாம் உங்களுக்கு 41 வருடங்களாகச் சேவை செய்துவருகின்றோம் என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்கின்றோம்.

★ நம்பிக்கை ★ பாதுகாப்பு ★ ஸ்திரத்தன்மை

வடமாகாணத்திலேயே ஆகக்கூடிய முதலீட்டாளர்களைக் கொண்ட ஒரே ஒரு தனியார்துறை நிதிநிறுவனம்

TEC

# த் பினான்ஸ் கம்பனி லிமிட்டெட்,

191, 249 சி, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம், போன் : 7680

# வரி விளம்பரம்

### பயிற்சி

றேடியோ - டெலிவிஷன், ஏயர் கொண்டிசனிங், வெல்டிங் மூன்றுமாத டிப்ளோமா பயிற்சி வகுப்புகள் ஆரம்பம் 8-9-81 அனைவரும் சேரலாம். நாசனல் அக்கடமி, மொரம்ஸ் கட்டிடம், ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். 0764

தகுந்த தொழிற் பயிற்சி பெற்று வெளிநாடு செல்லுங்கள். நவீன முறையில் Electric & Gas வெல்டிங் IEE முறைப்படி இலெக்றிக் வயறிங், PMG Certificate பயிற்சிகளுக்கு National Institutes, 57, பாமிசோல் வீதி, யாழ்ப்பாணம். 0645

### விற்பனைக்கு

10 Sri Bajaj ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு: நேரில் சந்திக்கவும். S. தம்பிஐயா, 75, பலாலி வீதி, புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம். 0771

முல்லைத்தீவு - மாங்குளம் வீதி ஓரம் ஒட்டுசுட்டான் பகுதியிலுள்ள பணிக்கன் குளத்தில் நெற்காணி 4½ நாலரை ஏக்கர் உடன் விற்பனைக்குண்டு. விபரம் க. இளையதம்பி, 17 சைவப்பிரகாச வீதி முல்லைத்தீவு அல்லது 14/1 அன்னசத்திர ஒழுங்கை யாழ்ப்பாணம் 0790

கே. கே. எஸ். பிரதான வீதியில், பெரியபுலம் பாடசாலைக் கருகாமையில் சதுரமான 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு பொ. வேலுப்பிள்ளை, 169/3 கோவில் வீதி. நல்லூர். தொடர்பு கொள்ளவும். 0785

### வாடகைக்கு

2 அல்லது 3 படுக்கையறைகள் உள்ளதும், தண்ணீர் மின்சாரம் முதலிய சகல வசதிகளுடனும்கூடியதுமான ஒரு தனி வீடு யாழ். மாநகரசபை எல்லைக்குள் உடனடியாகத் தேவை. விண்ணப்பிக்கவும் விளம்பர இல 0767 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 0767

### தவறிவிட்டது

நல்லூர் தேர் திருவிழா அன்று 294426 இலக்க அடையாள அட்டை, ஸ்கூல் பாஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் க. சிவநாதன் கொக்குவில் மேற்கு கொக்குவில் என்னும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். 9791

### ஸ்ரீ ராமஜெயம் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம் யாழ்ப்பாணம்

இத்தேவஸ்தானத்தில் 29-9-81ல் வருடாந்த மகோற்சவம் கொடியேற்ற விழாவுடன் ஆரம்பிக்கின்றது. 7-10-81ல் இரதோற்சவமும், 8-10-81ல் தீர்த்தோற்சவமும், 9-10-81ல் திருக்கல்யாண உற்சவமும், 13-10-81ல் சுமங்கலிகள் தீப பூஜையும் நடைபெறவுள்ளது. 6783

## ஏல விற்பனை

எமது சங்கத்தின் இசுசு (Isuzu) லொறியின் பாவித்த கூடாரம் (Lorry body) 1981-09-09ம் திகதி காலை 10-00 மணியளவில் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். லொறிக் கூடாரத்தை பார்வையிட விரும்புபவர்கள் சங்க வேலை நேரத்தில் பார்வையிடலாம். ஏலத்தில் பங்குபற்றுபவர்கள் ரூ. 100/-வைப்புப் பணமாகச் செலுத்தல் வேண்டும். இப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும். லொறிக் கூடாரத்தை ஏலத்தில் பெறுபவர் முழுப் பணத்தையும் அன்றே செலுத்துதல் வேண்டும். 3 நாட்களுக்குள் கூடாரத்தை அப்புறப்படுத்தல் வேண்டும்.

பொது முகாமையாளர், தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்.
தெல்லிப்பளை,
81-08-28.

0781

---

The Diary of
The Tamil University
Movement

as kept by

*Prof.* **A. Sinnathamby**
L.M.S.(Sey.)., F.R.C.S.(Edin.)., F.R.C.S.(Eng.)., F.R.C.O.G. (Gt. Br.)., Hon. D. Sc. (Jaffna).

*Please Contact:*
106. Brown Road,
JAFFNA.

Price: Rs. 25/-

---

## தேங்காய் விற்பனை

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான கண்டி வீதியிலே 173-ம் மைல் கல்லுக்கு அருகாமையில் உள்ள தர்மக்கேணி-நரந்தாய்த் தோட்டத்தில் சுமார் 30000 தேங்காய்கள் உடன் விற்பனைக்குண்டு. மேற்படி தேங்காய்களை தோட்ட அத்தியட்சகரின் அனுமதியுடன் எல்லா வேலைநாட்களிலும் பார்வையிடலாம். தங்கள் கேள்வி விண்ணப்பங்களை கீழ்க்காணும் விலாசத்திற்கு 1000 தேங்காய்கள் குறிவிலாமல் என்ன விலை என்பதை தெரியப்படுத்தி உடன் அனுப்பி வைக்கவும். கேள்வி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும்பட்சத்தில் தேங்காய்க்கான முழுத் தொகையும் மேற்படி தேங்காய்களை அப்புறப்படுத்தமுன் செலுத்தப் படல் வேண்டும்.
விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:-

**The Area Manager**
J. E. D. B. REGIONAL OFFICE,
165, PUTTALAM ROAD,
CHILAW. (0777)

---

பருத்தித்துறை
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/ து)
பருத்தித்துறை.

## பகிரங்க ஏல விற்பனை வெற்றுச்சாக்கு

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கத்தின் மொத்த விற்பனைக் களஞ்சியத்திலிருக்கும் சுமார் 5,000 வெற்றுச் சாக்குகள் இன்னாரியாக எதிர்வரும் 12-9-81 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு சங்கக்கட்டிடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலக் கூற்றில் வெற்றிபெறுவோர், ஏலக்கூற்றில் பெற்ற பொருட்பெறுமதியை உடனே சங்கக் காரியாலயத்தில் கட்டி ரசீது பெற்று தமக்குரிய பொருட்களை உடன் ஏற்றிச் செல்லுதல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்.
பரு. ப. நோ. கூ. சங்கம்.
1981-08-26.

0780

## பின்முற்றுகும் கட்டளை அறிவித்தல்

மல்லாகம்
மாவட்ட நீதிமன்றம்

மரணசாதனமின்றி மரணமெய்திய தெல்லிப்பளை தென் மேற்கு கொல்லன் கலட்டி கந்தையா கணேசலிங்கம் பெண் இராசலட்சுமியின் மரணச்சொத்து விடயத்தில்

மரணமெய்தியவர் கிளைகுறு வரமகிவம் கருகம் பாலை. தெல்லிப்பளை தென் மேற்கு

மனுதாரர்

மரணச்சொத்து)
நியாயாதிக்கம் ) ரி/68

எதிர்

பராயமடையாத-
(1. கணேசலிங்கம் பரமேஸ்வரன்
(2. கணேசலிங்கம் இராசநாயகி
(3. கணேசலிங்கம் கேதீஸ்வரன்

எல்லோரும் குளமங்கால் தெல்லிப்பளை

1, 2, 3-ம் எதிர்வாதிகள் பராயமடையாதவர்களாதலினால் தங்கள் வழக்குக் காவலன் 4-ம் எதிர்வாதி மூலம் வெளிப்படுகின்றனர்.

4. கந்தையா கணேசலிங்கம் கடச்சப்பாய் கொல்லன்கலட்டி, தெல்லிப்பளை தென் மேற்கு

எதிர்வாதிகள்

மேலே கூறப்பட்ட தத்துவ வழக்கு மேலே குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின் மரணச்சொத்தை நிரவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் விண்ணப்பஞ் செய்யப்பட்டுள்ளது. அம்மனுவின் அதன் பிரகாரம் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இவ்விண்ணப்பத்தில் அக்கறையுள்ள நபர்கள் எவரேனும் 1981-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 16-ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு முன்னராக இந்நீதிமன்றத்தின் முன் தோன்றி இவ்வாறு பதியப்பட்டபின் முற்றுகும் கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கக்கூடாது என்பதற்கு தகுந்த காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1981-ம் ஆண்டு ஆவணி மாதம் 28-ந் திகதி

ஒப்பம்:
கணேசன்
பதிவாளர்

வரையப்பட்டது!
ஒப்பம்
வ. மயில்வாகனம்
மனுதாரரின் சட்டத்தரணி

0768

## தெல்லிப்பழை துர்க்கை அம்மன் திருவிழா திங்கள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் வருடாந்த உற்சவம் இன்று திங்கட்கிழமை முற்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

வேட்டைத்திருவிழா 8-ம் திகதியும் சப்பறம், தேர், தீர்த்தம் முறையே 9ம், 10ம், 11ம் திகதியும் நடைபெறும். வைரவர் பொங்கல் 15ம் திகதி இடம்பெறும்.

பூசைகள் காலை 7 மணிக்கு ஆரம்பமாகும். இரவு 9 மணிக்கு அர்த்தசாமப்பூசை நடைபெறும்.

திருவிழாக்காலத்தில் அடியார்களுக்கு நண்பகல் அன்னதானம் வழங்கப்படும்.

சுகாதாரம், பாதுகாப்பு, போக்குவரத்து வசதிகளும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் உத்தியோக பூர்வமாக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன.

மக்கள் விற்பனவுத் திணைக்களம் ஒன்று இவ்வாலயத்தில் அமைப்பதற்கு யாழ். மாவட்ட பரிபாலன உதவி அரசாங்க அதிபர் திரு கே. சுப்பிரமணியம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

தேர், தீர்த்த நிகழ்ச்சிகள் வானொலியில் அஞ்சல் செய்வதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (மா)

## 'சமய வளர்ச்சிக்காக பஞ்சாயத்துசபை உதயம்'

(சாவகச்சேரி)

"நாட்டில் ஏற்படும் அனர்த்தங்களை இறைபக்தி மூலமே நீக்கமுடியும். மக்களிடையே இறைஞானம் குன்றியதாலே, அடிக்கடி மக்கள் மத்தியில் பகைமை உருவாகின்றது. இதற்காக, ஒவ்வொரு கிராமத்திலும், இருபத்தைந்து குடும்பங்களுக்கு, ஒரு பஞ்சாயத்து சபையை ஏற்படுத்தி, பஜனை, இறைநாம வழிபாடு களில் மக்கள் ஈடுபட வேண்டும்."

இவ்வாறு சமய தொண்டரும், ஆத்ம ஜோதி நிலைய வித்தகருமான திரு. நா. முத்தையா, சாவகச்சேரியில், சமயவளர்ச்சி பஞ்சாயத்துச் சபையொன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இவ்வைபவத்திற்கு சாவகச்சேரி, இந்து சமய வளர்ச்சிச் சங்க தலைவர் திரு. எஸ். ஐயாத்துரை தலைமை தாங்கினார்.

வைபவத்தில் உரையாற்றிய தலைவர், தமதுரையில் 'காலனித்துவ ஆட்சியில், இந்து மதத்தின் வளர்ச்சிக்காக, பிரமச்சாரிய விரதம் பூண்டு, சைவத்திற்கும் தமிழிற்கும் அளப்பரிய சேவையாற்றிய ஆறுமுகநாவலரது வரிசையில் முத்தையாவும் சேவையாற்றி வருகின்றார். அவரது சேவையை புனிதப்படுத்துமுகமாக, 'அடிகள்' என்ற பட்டத்தை நாம் வழங்கி கௌரவிக்கின்றோம்.

பஞ்சாயத்து சபையின் செயலாளர்களாக, திருவாளர்கள் எஸ். ஐயாத்துரை, திரு. முன்னைநாள் தபாலதிபர் இளைப்பாறிய உத்தியோகத்தர் ஆ. பொன்னுத்துரை, பண்டிதர், எம். கனகசபாபதி, எஸ். நடராசாவும் தெரிவாகினர். (க)

---

யாழ்ப்பாண அக்கடமி
க. பொ. த.
உயர்தர பரீட்சை
ஏப்பிரல் 1982

## மீட்டல் வகுப்புகள்

வகுப்புகள் 9-9-81ல் ஆரம்பமாகின்றன. சேரவிரும்புவோர் உடன் விண்ணப்பிக்கவும். 1981 பரீட்சைப் பெறுபேறுகளின் பின் மேலதிக வகுப்புகள் ஆரம்பமாகமாட்டா.

அதிபர்
தொலைபேசி எண்: 617.
376, பிரதான வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

0758

---

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்(வ/து)
பருத்தித்துறை

## பகிரங்க ஏல விற்பனை

கழிவு மா, மல்லி, சீனி, புத்தகங்கள் என்பன எதிர்வரும் 09-9-81 புதன்கிழமை காலை 10-00மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

பொதுமுகாமையாளர்,
பரு. ப. நோ., கூ. சங்கம்,
பருத்தித்துறை.
1981-08-26.

0778

---

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்(வ/து)
பருத்தித்துறை

## பகிரங்க ஏல விற்பனை

இசிசு லொறி வின்ஸ்கிறின் கிளாஸ்: பென்ஸ் லொறி 911- உதிரிப்பாகங்கள்

எதிர்வரும் 09-9-81 புதன்கிழமை காலை 10-00 மணியளவில் பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கத்தில் வைத்து ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

பொது முகாமையாளர்,
பரு. ப. நோ. கூ. சங்கம்.
பருத்தித்துறை,
1981-08-26.

0779



## மாஸ்கோ செல்கிறார்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவனும், அச்சுவேலியைச் சேர்ந்தவருமான அமிர்தலிங்கம் ஸ்ரீமேவன் மாஸ்கோ - ராஜாங்க பல்கலைக் கழகத்துக்கு மருத்துவ கல்வி பெற புலமைப்பரிசில் பெற்று செல்கின்றார். இவர் அச்சுவேலி வாசியும் தற்பொழுது புத்தூர் கிழக்கு கிராமசேவை அலுவலருமான திரு க. அமிர்தலிங்கம், திருமதி பா. அமிர்தலிங்கம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரராவார் [ச-லி]

## திருநாள் ஏற்பாடு

(மல்லூர்)

மல்லூர் எழுதூர் பரிசுத்த அடைக்கலநாயகி திருநாள் செப்டம்பர் மாதம் 8-ம் திகதி சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கிறது. அன்று மல்லூர் புதிய ஆயர் அருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுமெனவும் தெரியவருகிறது

**மணிவாக்கு**

சமயப்பற்றற்ற ஒழுக்கம் வேரில்லாமரம்; ஊற்றுக் கசிவில்லாத ஓர் ஓடை; அது மணல்மீதமைந்த மனை; மழையில்லாதபோது அது வாழ்வதற்கெளிதாம்; ஆனால் புயல் வந்தால் தாங்காது.

— பேர்னாட் ஷா

# நமது நோக்கு

## விடுகதைகளுக்கு விடைவேண்டும்

"திருகோணமலையில் அமெரிக்கா கடற்படைத் தளம் அமைக்க ராணுவ வசதிகளை இலங்கையிடம் கேட்டதில்லை; கேட்கப் போவதுமில்லை: இது நான் இங்கு வந்தபோது கேள்விப்பட்ட புனைகதை."

இவ்வாறு இங்கு நிலவிய வதந்திகளை திட்டவட்டமாக நிராகரித்துள்ளார் இலங்கைக்கு இரண்டுநாள் விஜயஞ்செய்த அமெரிக்காவின் ஐ. நா. பிரதிநிதி திருமதி ஜீன் கிர்க் பற்றிக் அவர்கள்.

ஆசிய நாடுகளில் சுற்றுப் பிரயாணம்கொண்டிருக்கும் தூதர் அம்மையார் றீகன் ஆட்சியில் ஒரு அமைச்சர் அந்தஸ்து உடையவர்.

நெருப்பில்லாமல் புகைவராதே என்று விடையளிப்பவர்களுக்கு வதந்தி ஒரு புறநடையென நாம் பதிலளிக்க வேண்டியிருக்கிறது.

தூதர் அம்மையாரைப் பொறுத்தளவில் அவர் வழங்கிய பல கருத்துக்கள் அவருடைய இராஜதந்திரத்தின் திறமையைஉணர்த்துகின்றன.

ஒரு தூதரின் திறமை என்ன என்பது அவருடைய வரைவிலக்கணம், ஆங்கிலத்தில் சுவையாகவும் சிலேடையாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"தன்னுடைய நாட்டின் நன்மைக்காகவே தூதர் ஒருவர் வேற்றுநாட்டில் வதிகிறார். 'வதிகிறார்' என்று சொல்லின் ஆங்கிலம் [LYING] 'வாய்மை இடத்து பொய்மை' என்ற முனிவரின் கருத்தைக் கொண்டிருக்கின்றது.

முனிவரின் குறள், தீர ஆராயாமல் நன்மைதான் பயக்கும் என்று எவரும் பொய் சொல்லிவிடலாகாது என்கிறது. ஆனால் ஒரு நாட்டின்தூதர் இந்தக் கட்டுப்பாட்டுக்கமைய நடக்கமுடியாது.

திருமலையை ஆயுத தளமாக்கும் திட்டம் அமெரிக்காவிற்கு கிடையாதென்பதை நாம் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளுவோம்.

ஆனால் அம்மையாரின் ஏனைய கூற்றுகள் சர்ச்சைக்குரியன.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தை சமாதானப் பிரதேசமாக்கவேண்டிய அவசியமில்லை என்பது அவரின் இன்னொரு கருத்து அப்படிச் செய்வதனால் அப்பிராந்திய நாடுகளுக்கு கூடிய பாதுகாப்பு கிடைத்துவிடுமென்பது தவறென்று கருதுகிறார்.

அதுமட்டுமல்ல; வெளிநாட்டு யுத்தக் கப்பல்கள் இந்து சமுத்திரத்தில் நடமாடுவதால் அங்கு யுத்த அபாயம் உண்டு என்று கூறுவது தவறென்றும் கருதுகிறார்! இதனைப்புரிவதுஇலகுவானதல்ல!

யுத்த ஆயுதங்கள், நியூட்ரன் குண்டுகள் உட்பட தாராளமாக நாடுகள் வைத்திருந்தால் யுத்தம் ஏற்படாதென்பது அமெரிக்க ஜனாதிபதியின்திடமான கொள்கை அதற்கேற்ற விளக்கமே அம்மையாரின் இந்து சமுத்திரத்தைப் பற்றியது.

இந்தியாவும் இலங்கையும் இக்கருத்தை எவ்வாறு ஏற்கலாம்? ஏனைய நாடுகள் தாமும் போர்முனையில் தான் அமைதி நிலவுமென்பதை எவ்வாறு ஒப்புக் கொள்ளும்?

எவ்விதத்திலும் 'அமைதிப் பிரதேசம்' பிரகடனப் படுத்தவேண்டும் என்று இந்தியா விடப்பிடியாக நிற்கின்றது. இலங்கை அக்கருத்துக்கு ஆதரவு நல்குகின்றது. கொழும்பிலே நடந்திருக்கவேண்டிய மாநாட்டை ரஷ்யா ஆதரிக்கிறது. அமெரிக்கா பல சாட்டுகள் சொல்லித் தடைப் படுத்துகின்றது.

அடுத்தது: பாகிஸ்தானுடன் அமெரிக்கா செய்து கொண்ட ஆயுத ஒப்பந்தம் இந்தியாவின் பாதுகாப்புக்கு பங்கம் ஏற்பட்டுள்ளதாக கூறமுடியாதென்கிறார் திருமதி கிர்க் பற்றிக் அவர்கள். காரணம் இந்தியா பலம்வாய்ந்தநாடு.

இந்தப் பதில் திருமதி இந்திரா காந்திக்குப் போதுமானதா? அவர் இதனையிட்டு நிறைந்த அச்சம் கொண்டிருக்கிறார்.

பொதுவாக அமெரிக்க அரசின் புதிய அரசியல் அமைப்பு மனித உரிமைக்கே முதலிடம் வழங்குகின்றது என்று சொன்ன ஐ நா.வின் அமெரிக்கப் பிரதிநிதி, இந்த வகையில் அமெரிக்கா இலங்கையைப் போன்றது; மனித உரிமைகள் செவ்வனே பேணப்படுகின்றன என்று சமாதானமும் பேருவகையும் கொண்டதான முடிவுக்கு வந்துள்ளார்.

கம்யூனிஸ்ட் அல்லாத ஜனநாயக ஆட்சிகளுக்கு, தெற்கு ஆசியாவில் ஆபத்து ஏற்பட்டால் அமெரிக்கா ராணுவ உதவி உடனடியாக வழங்குமென்பது இன்றைய அமெரிக்க ஆட்சியின் கொள்கை. அமெரிக்க நிதி உதவி பெறும் இலங்கை இதுபற்றி அவதானமாக இருக்கவேண்டியது.

கம்பூச்சிய விவகாரம் ஏற்படுத்திய தீவிரமான கொள்கை இது. வியட்நாம் வரலாறு திரும்பவும் நடிக்கப்படுமாவென்று அஞ்சுவது நியாயம்.

கம்யூனிஸ்ட் அல்லாத ஜனநாயக ஆட்சியென்பதை எவ்வாறு கணிப்பது? கம்யூனிசத்தை எதிர்க்கும், மக்களை வதைக்கும் பிற்போக்கு ஆட்சிகளெல்லாம் ஜனநாயக நாடுகளா?

இதற்கு சோவியத் ரஷ்யா விடையளிக்க முந்தும்; அது மட்டுமல்ல அவ்வித ஆட்சிகளை மடக்க உடனடி உதவி நல்கும்.

இந்த இழுதலைக்கொள்ளியில எறும்புபோல் உள்ளிட்டு துவஸ்மதைப்படாமல், இந்தியாவும் இலங்கையும் கட்டுப்பாடுடன், பக்கம் சாராமல் நிமிர்ந்து நிற்க, ஒருவருக்கொருவர் விசுவாசமாக இருத்தலே விவேகம்.

# இடதுசாரி இயக்கத்தின் மூத்த தலைவர்



இலங்கை விடுதலை வீரர்களில் தலைசிறந்தவரும், இடதுசாரி இயக்கத்தின் மூத்த தலைவரும், சட்டசபைக்கு 1931-ல் முதன் முதலாகத் தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்களில் இதுவரை இருந்தவரும், தமது முழுவாழ்வையும் கம்யூனிச இயக்கத்திற்கும் பாட்டாளிவர்க்கத்தின் விமோசனத்திற்கும் அர்ப்பணித்த மேதையுமான தோழர் வைத்திய கலாநிதி சுசீஸ்வர அபயவர்த்தன விக்கிரமசிங்காவின் மறைவு நாட்டின் சகல துறை மக்களையும் கவலையில் ஆழ்த்தியுள்ளது.

மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த அக்குரஸ்ஸ பிரதேசத்திலுள்ள அத்துரேலியா என்னும் கிராமத்தில் 1901ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ம் திகதி பிறந்தார். தந்தையின் பெயர் தேதியஸ் பிரதிநந்திஸ் அபேவர்த்தன விக்கிரமசிங்கா. தாயின் பெயர் தானுக யோனு நாகவத்த.

### தொழிலாளர் இயக்கத்தில்

டாக்டர் விக்கிரமசிங்கா கிராமப் பாடசாலைக் கல்வியின் பின்னர் காலி மஹிந்தக் கல்லூரியிலும், கொழும்பு ஆனந்தாக் கல்லூரியிலும் உயர் கல்விபெற்று வைத்திய கலாநிதிக் கல்வியை இங்கிலாந்து சென்று கற்ருர். இங்கிலாந்தில் இருந்த காலத்தில் அக்டோபர் சோசலிசப்புரட்சி, இங்கிலாந்தில் வளர்ச்சியுற்று வந்த தொழிலாளர் இயக்கங்கள் போன்றவற்ருல் உந்தப்பட்டு அந்நாட்டின் கம்யூனிச இயக்கத்துடன் தொடர்பு கொண்டதோடு ஒரு மாக்சியவாதியாகவும் மாறி அக்கட்சியின் உறுப்பினராகவும் சில காலம் பணியாற்றினர்.

### கிளர்ச்சி செய்தார்

டொனமூர் அரசியல் திட்டம் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கவில்லையென்றும், பூரண சுதந்திரத்தைக் கோரியும் அங்குள்ள ஏனைய மாணவர்களுடன் சேர்ந்து கிளர்ச்சி செய்தார்.

இதன் பின்னர் இலங்கை திரும்பியதும் வைத்தியத் தொழிலில் கடமையாற்றும் பொழுது இலவச வைத்தியம் பெறும் ஏழை நோயாளர்களை குணமாக்குவதில் அதிக கவனம் செலுத்தி பாமரமக்களின் இதயங்கவர்ந்தார். அதன்வாயிலாக அவர்களின் சிந்தனையைக் கிளறி ஆட்சியாளர்களின் தவறுகளைச்சாடினர். இது ஆட்சியாளர்களுக்குப் பெரும் தலைவலியாகிவிட்டது இதனால் அவர் உத்தியோகத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார். பின்பு 1931 ஜூனில் முதலாவது அரசாங்க சபைக்கு மொறவாக்கத் தொகுதி அங்கத்தவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

### மக்களுக்காக செயல்பட்டார்

இக்காலத்தில் [1933-36] மலேரியாக் கொள்ளை நோயால் ஒரு லட்சம் மக்கள் மடிந்தார்கள். இந்நேரத்தில் பாராளுமன்றத்தில் வாதாடியதோடு இந்நோயால் பாதிக்கப்பட்ட ஏழை மக்களுக்கும் தன் நலம் கருதா வைத்திய சேவையின் மூலம் அருந்தொண்டாற்றினார். மலேரியா நோய்த் தாக்கத்தைப் பற்றி எவ்வித அக்கறையும் காட்டாத அன்றைய ஆட்சியினர் பிரித்தானிய சக்கரவர்த்தி ஐந்தாம் ஜோர்ஜ் மன்னன் ஆட்சிபீடம் ஏறிய வெள்ளிவிழாவை கொண்டாட எடுத்த முயற்சியை வன்மையாக எதிர்த்தார். நாட்டு மக்கள் மலேரியா நோயில் கொள்ளைபோகும் அத்தருணத்தில் மன்னனுக்கு வாழ்த்தா எனக் கொதித்தெழுந்தார்.

### சூரியமல் இயக்கம்

டாக்டர் விக்கிரமசிங்கா மலேரியா நோய் ஒழிப்பு நடவடிக்கைகளை நாடு தழுவிய ரீதியில் ஒரு இயக்கமாக உருவாக்கும் கருத்தில் அன்று ஏகாதிபத்தியத்தினரால் கொண்டாடப்படும் பொப்பி மலர் இயக்கத்திற்கெதிராக சூரியமல் இயக்கத்தினை ஆரம்பித்து வைத்தார். இவ்வியக்கத்திற்கு செல்வி டொறீன் யங் செயலாளராக விருந்து கடமையாற்றினர். இப்பெண்மணியை பின்னர் விவாகம் செய்து கொண்டார்.

இக்காலகட்டத்தில் டாக்டர் என். எம். பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, பிலிப் குணவர்த்தன, லெஸ்லி குணவர்த்தன போன்ற தலைவர்களுடன் சேர்ந்து 1935-ம் ஆண்டில் சமசமாஜக் கட்சியை ஸ்தாபித்தார்.

### கம்யூ. கட்சியை ஆரம்பித்தார்

இரண்டாவது மகாயுத்தத்தின் போது இந்த யுத்தத்தை அணுகும் முறையில் எழுந்த கருத்து வேறுபாட்டின் காரணமாக கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார். அதன்பின் 1943 ஜூலை 3-ம் திகதியில் இலங்கைக் கம்யூனிஷ்ட் கட்சியை ஆரம்பித்தார்.

### சிறை சென்ருர்

இவரது ஆரம்பகால நடவடிக்கைகளின் காரணமாக இவர் சிறை செல்ல நேரிட்டது. ஆரம்பகாலத்திலிருந்தே இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக இருந்து வழி நடத்தியுள்ள டாக்டர் விக்கிரமசிங்கா மாக்சிய - லெனினிஸகண்ணோட்டத்தில்பாதை பிசகாது வெகு நிதானமாகக் கடமையாற்றினர். மேலும் விசேஷமாக இலங்கையின் நீர்வளம், நீர்ப்பாசன வசதிகள் பற்றி ஆழ்ந்த ஆராய்ச்சி செய்துள்ளார்.

தேசிய இனப்பிரச்னையை வர்க்கக் கண்ணோட்டத்தில் அணுகிய டாக்டர், மொழிப் பிரச்னை எழுந்தபொழுது தமிழ் மொழிக்கு நியாயம் கோரியும், பின்பு தமிழ் தேசிய இனத்திற்கு சுயநிர்ணய உரிமை கோரியும், பிரதேச சுயாட்சி முறையின் மூலம் தீர்வுகாண இறுதிவரையில் போராடியுள்ளார். அவர் இன்று நம்மை விட்டுப் பிரிந்தாலும் அவர் ஆற்றிய சேவைகள் மக்கள் மத்தியில் என்றும் நிலைத்து நிற்கும்.

அ. வயித்திலிங்கம்

# நாராயண் பற்றிய சோவியத் நூல்

"கிழக்கிந்திய எழுத்தாளர்களும் அறிஞர்களும்" என்ற வரிசையில் இந்தியாவின் பிரபல எழுத்தாளரான திரு. ஆர். கே. நாராயணனைப் பற்றிய நூலொன்று மாஸ்கோவில் அண்மையில் வெளியாகியுள்ளது. ஆர். கே, நாராயணனின் நாவல்களும், சிறுகதைகளும் சோவியத் யூனியனில் மொழிபெயர்க்கப்பட்டு சோவியத் வாசகர்கள் மத்தியில் மிகப் பிரபல்யம் பெற்றுள்ளன.

சோவியத் விஞ்ஞானப் பேரவையின் கிழக்கத்திய ஆய்வுக் கழகத்தில் பணியாற்றும் ஆராய்ச்சியாளரான யெலெனு கலினிகோவா இந்த நூலை எழுதியுள்ளார். ஆங்கிலத்தில் எழுதும் இந்திய எழுத்தாளர்களது இலக்கியப் படைப்புக்களை கடந்த 20 ஆண்டுகளாக யெலெனு படித்து வருகிருர் என்பது குறிப்பிடத்தக்கது.

யெலெனு கலினிகோவாவின் கருத்துப்படி ஆர். கே. நாராயண் படைப்புக்கள் தென்னிந்திய கலாசாரத்தினது இலக்கியத்தின் செழுமைகளை, குறிப்பாக தமிழ் சமஸ்கிருத காப்பியங்களையும்; வேதங்களையும் திருக்குறளையும்அடிப்படையாகக்கொண்டவை. இவை யாவும்கூட ரஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

ஆர். கே நாராயணனின் "தி கைட்", 'மன் ஈட்டர் ஒப் மால்குடி", 'தி வென்டொர் ஒப் ஸ்வீட்ஸ்", "கோட்ஸ், டெமொன்ஸ் அன்ட் அதேர்ஸ்' ஆகிய நாவல்களும் 15 சிறுகதைகளும் ரஷ்யாவில் மொழிபெயர்க்கப்பட்டு சோவியத் சஞ்சிகைகளில் வெளியாகியுள்ளன. மாஸ்கோ முன்னேற்றப் பதிகம் இவற்றைத் தொகுத்து புத்தகமாகவும் வெளியிட்டுள்ளது.

# மக்கள் கருத்து

## இடமாற்றம் கிடைக்குமா?

இடமாற்ற ரீதியில், கல்வி அமைச்சு நடைமுறைப்படுத்தும் முறையானது - பலவீனமானது என்பதை என்போன்றவர்கள் நிச்சயமாக உணரமுடிகிறது. கஷடப்பிரதேச சேவையில் ஏழு வருடங்கள் - கடமை புரிந்திருந்தும், ஆயுள்தண்டனை பெற்ற குற்றவாளியைப்போல, அனுபவிக்கும் இடர்கள் சொல்லும்தரமன்று. மனைவி ஓரிடம், மக்கள் ஓரிடம், மணாதவன் ஓரிடம் இவ்வாருக அலைந்து திரியும் நிலை குறித்து, மனிதாபிமானமுள்ளவர்கள் ஒரு சொட்டுக் கண்ணீர் விட்டுக் கொள்ளட்டுமே!

பல தடவைகளாக, இடமாற்ற விண்ணப்பங்கள், அனுப்பப்பட்ட போதிலும், நீதி அங்கே நிகழ்வதில்லை. நியாயம் அங்கே நிலைப்பதில்லை. இவ்விடயத்தில், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கூடிய கவனம் எடுப்பார்களாயின் என்போன்றவர்களுக்கு, பலரும் வாழ்வாக அமையும் என்பது திண்ணமே!

சி. சிவஞானராஜா,
அளவெட்டி.

சிறிமா ஆட்சியில்

# தமிழர் பொருளாதாரத் துறையில் சிறந்து விளங்கினர்

## சென்னையில் பீலிக்ஸ்

சென்னை, ஆக. 30

திருமதி சிறிமா பண்டார நாயக்காவின் ஆட்சியில் தமிழர்கள் பொருளாதாரத்துறையில் சிறப்படைந்து அன்புடனும், நட்புறவுடனும் வாழ்ந்து வந்தார்கள்.

சென்னையில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் பேசிய முன்னாள் இலங்கை நிதி அமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா கூறினார்.

சுதந்திரக் கட்சி உருவாக்கிய இலங்கை செல்வாயம் மிளகாய் இறக்குமதிக்கு தடை விதித்திருந்ததால் வடபகுதி விவசாயிகள் நன்மை அடைந்திருந்தார்களென்றும் இன்றைய அரசின் தாராள இறக்குமதிக் கொள்கையால் வடபகுதி விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளார்களென்றும் அவர் கூறினார்.

## இலங்கை வன்முறை

### ஹமீத்துக்கு எம். ஜி. ஆர். கடிதம்

சென்னை, ஆக. 30

"இலங்கையில் வன்முறைச் சம்பவங்களை ஒழிக்க தீவிர நடவடிக்கை எடுப்பீர்கள் என்று நம்புகிறேன்" என்று தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் இந்திய வெளிவிவகார அமைச்சர் மூலம் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத்துக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

சென்னை வானொலி நிலையம் கதிர்காமத்திலிருந்து திரும்பும் வழியில் வன்செயலுக்கு பலியான சம்பவத்தை அடுத்தே தமிழக முதலமைச்சர் இக்கடிதத்தை எழுதியுள்ளார்.

## ஹர்த்தால் முயற்சி

சென்னை, ஆக. 30

இலங்கை கலவர சம்பவங்களுக்கு கண்டனம் தெரிவித்து ஹர்த்தால் நடத்துவதற்கான திகதியை தீர்மானிப்பதற்காக சர்வகட்சி பிரதிநிதிகளும் சந்திக்கவிருக்கின்றனர்.

ஹர்த்தால் நடக்கும் தினத்தை சபையில் அறிவிக்குமாறும் சர்வகட்சியினரும் கோரியுள்ளனர். இது பற்றி கூடிப்பேசி முடிவு செய்யப்படும் என சபாநாயகர் அறிவித்துள்ளார்.

## மேத்தாய் காலமானார்

புதுடில்லி, ஆக. 30

இந்தியாவின் முன்னாள் பிரதமர் அமரர் ஜவஹர்லால் நேருவின் காரியதரிசியாக இருந்த திரு ஜி. மேத்தாய் நேற்று சென்னையில் காலமானார்.

## வடஇலங்கை சங்கீதசபை புதிய பரீட்சைகளை நடத்தும்

(யாழ்ப்பாணம்)

கடந்த கால் நூற்றாண்டு காலமாக சங்கீத மிருதங்க பரீட்சைகளை மட்டும் நடாத்தி வந்த வட இலங்கைச் சங்கீத சபை இந்த ஆண்டு முதல் பரதம், கதகளி, நாடகம் ஆகிய துறைகளிலும் பரீட்சை நடத்த முன்வந்துள்ளது.

சங்கீத மிருதங்க பரீட்சை விதானங்களிலும் பல மாற்றங்கள் 1982ம் ஆண்டு முதல் நடைபெறவிருக்கும் பரீட்சைகளுக்கு அமுல் செய்யப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

வட இலங்கை சங்கீதசபை யாழ் கல்வித் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் ஒரு ஸ்தாபனம் என்பதும் இச்சபை சங்கீத, மிருதங்க பரீட்சைகளை ஆறு பகுதிகளாக நடத்தி வருவதும் தெரிந்ததே. ஆறாவது பகுதிப் பரீட்சை ஆசிரிய தரம் என்று அழைக்கப்படும். இப் பரீட்சையில் சித்தியடைந்த ஆயிரக்கணக்கானவர்கள் நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள அரசாங்க பாடசாலைகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றி வருகின்றார்கள்.

கல்வி அமைச்சின் புதிய கல்விக் கொள்கைக்கு அமைய சங்கீதசபை பரதம், கதகளி, நாடகம் ஆகிய துறைகளையும் சேர்த்துக் கொண்டுள்ளது.

அதன் வழமையான சங்கீத, மிருதங்க பரீட்சைப் பாடவிதானத்தில் உப பாடம் என்ற பகுதி இம்முறை புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது.

புதிய பாட விதானம் இச் சபையின் பரீட்சைகளைப் பல்கலைக்கழக அந்தஸ்துக்கு உயர்த்தியுள்ளன என்று இசை ஆசிரியர்கள் பலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சங்கீத சபைப் பரீட்சைகளுக்கு இவ்வுயர்ந்த அந்தஸ்து கிடைக்க வேண்டும் என்று அயராது உழைத்து வருபவர் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. க. சிவநாதன் என்பது குறிப்பிடத்தக்கது. கல்விப் பணியுடன் பல்கலைக் கழகப் பணியிலும் திரு. க.

(5-ம் பக்கம் பார்க்க)

பாகிஸ்தானுக்கு ஆயுத விநியோகம்

# இந்தியா பதட்டம் அடையத் தேவையில்லை

## இந்திரா கருத்து

புதுடில்லி, ஆக. 30

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுதங்களை வழங்குவது குறித்து நாம் பதட்டம் கொள்ளத்தேவையில்லை, இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்துள்ளார்.

வல்லரசுப் போட்டி எமது கதவில் வருகிறது என்பது தான் இந்தியாவின் கவலை என்றும் திருமதி காந்தி கூறினார்.

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுத விநியோகம் குறித்து இந்தியா நீண்டநாட்களாகக் கவலை கொண்டுள்ளது தெரிந்ததே. (இ)

தேர்தல் காலத்தில்

## கூட்டணியின் பிரசாரமே வன்செயலுக்குக் காரணம்

### சிங்கப்பூரில் காமினி திசநாயக்கா

(சிங்கப்பூர்)

இன்று இலங்கையைப் போன்ற சுதந்திரமுள்ள நாடு உலகத்தில் வேறு எங்கும் காணமுடியாது.

சிங்கப்பூர் வெகுஜனத் தொடர்பு துறையினர் மத்தியில், இலங்கையில் தற்போதைய நிலைமைபற்றி விளக்கிக் கூறிய காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினிதிஸநாயக்கா மேற்கண்டவாறு கூறினார்:

சிங்கப்பூரிலுள்ள ஸ்தானிகராலயத்தில், பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் அமைச்சர்காமினிதிஸநாயக்கா மேலும் கூறியதாவது:-

இலங்கை உயர் நீதிமன்றங்களில் தமிழர்கள் நீதிபதிகளாக இருக்கிறார்கள். பிரதி பொலிஸ் மா அதிபர்களாக தமிழர்கள் இருக்கின்றனர். பல்வேறு நாடுகளில் இலங்கை தூதானிகர்களாக தமிழர்கள் கடமையாற்றுகிறார்கள்.

அமைச்சு செயலாளர்களாகவும் துணைச் செயலாளர்களாகவும் தமிழர்கள் உயர்பதவி வகிக்கின்றார்கள்.

தேர்தல் காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மேற்கொண்ட பிரசாரத்தின் காரணமாக மக்கள் ஆத்திரமடைந்து வன்செயல்களில் ஈடுபட்டனர்.

இப்படியான நிலையில் வெளிநாடு முதலீடு பாதிக்கப்படுமா? என நிருபர் ஒருவர் கேட்டபோது பாதிக்கப்படாது என்று கூறிய அமைச்சர் உணர்ச்சியூட்டும் செய்திகள் பற்றி வெளிநாட்டு முதலீட்டாளருக்குத் தெரியுமென்றும் அவர்கள் அதுகுறித்து கவலைப்படமாட்டார்கள் என்றும் கூறினார்.

இலங்கை கலவரங்கள் பற்றி சிங்கப்பூர் வெகுஜனதொடர்பு சாதனங்கள் பல விதத்திலும் பயன்படுத்தப்பட்டதை அடுத்தே இப்பத்திரிகை மகாநாடு கூட்டப்பட்டது. (இ)

## லக்சலாவின் சாதனை

(கொழும்பு)

ஒருநாளில் மட்டும் ஒன்றரை லட்சம் ரூபாவுக்குமேல் பெறுமதியான பொருட்களை விற்பனைசெய்து "லக்சலா" ஒரு சாதனையை நிலைநாட்டியுள்ளது.

இச்சாதனை ஆகஸ்ட் 24ம் திகதி நிலைநாட்டப்பட்டது. "லக்சலா" 1964ம் ஆண்டு திறக்கப்பட்ட போதிலும், இந்த அளவிற்கு ஒரே நாளில் விற்பனை நடைபெற்றது இதுவே முதல் தடவை.

உல்லாசப் பயணிகளே பெரும்பாலான பொருட்களை கொள்வனவு செய்தனரென்றும், முகமூடிகள், நூதன பொருட்கள், பட்டுத்துணிகள் வெள்ளியிலான பொருட்கள், செயற்கை மலர்கள் போன்றவற்றையே அவர்கள் பெரிதும் விரும்பி வாங்கினர் என்றும் "லக்சலா" வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (இ)

## 'தமிழக அரசின் பழிவாங்கும் செயல்!'

### கருணாநிதி கண்டனம்

சென்னை, ஆக. 30

சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்திற்கு முன் ஆர்ப்பாட்டம் நடத்த முயன்ற தி. மு. க. வினர் கைதுசெய்யப்பட்டதற்கு தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

தி. மு. க. மீது அரசியல் பழிவாங்கும் நோக்குடனேயே தமிழக அரசு இவ்வாறு நடந்துள்ளது என்று திரு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்திற்கு பொலிஸ் அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## பரீட்சை மாணவர்கள் ஏமாற்றம்!

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள பரீட்சை நிலையங்களில் ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சைக்குத் தோற்றிய பல தமிழ் மாணவர் தமிழ்ப் பாடத்திற்குத் தோற்ற முடியவில்லை.

தமிழ்ப் பெற்றோரின் பிள்ளைகள் விருப்பத்திற்குரிய தமிழ் பரீட்சையில் சித்தியடைந்தால் இது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என விதிஇருக்கிறது. ஆகவே பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்குபடியால் பாதிப்புற மாணவர்கள் கவலையுடன் அங்கலாய்க்கின்றனர்.

தமிழ்மொழிப் பாடப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர் சிலர் பரீட்சை நிலையத்திற்குச் சென்றபோது அவர்களிடம் விருப்பத்திற்குரிய தமிழ் வினாத்தாள்கள் கொடுக்கப்பட்டன. மாணவர்கள் தாம் தமிழ்மொழிப் பரீட்சைக்கே விண்ணப்பித்தார்கள் என்று கூறியபோதும் விருப்பத்திற்குரிய தமிழ் வினாத்தாளே அனுப்பப்பட்டுள்ளதாக பரீட்சை மேற்பார்வையாளர்கள் தெரிவித்தனர்.

சில மாணவர்கள் வினாத்தாள்களை ஒப்படைத்துவிட்டு வெளியேறிவிட்டனர். சிலர் விருப்பத்திற்குரிய தமிழ் வினாத்தாள்களுக்கு விடை எழுதினர். மாதோட்டப் பகுதிகளில் உள்ள மாணவர்கள் பலர் இதனால் பாதிப்படைந்துள்ளனர்.

பழைய பாடத்திட்டத்திற்கமைய நடந்த இறுதி ஜி. ஸி. ஈ. சாதாரண பரீட்சை இதுவாகும். பரீட்சைத் திணைக்களம் இன்னுமொரு தடவை தாம் பரீட்சையில் தோற்ற அனுமதியளிக்க வேண்டுமென பாதிப்படைந்த மாணவர்கள் கோருகின்றனர்

## பரீட்சை ஆணையாளர் விஜயம்

(உடுப்பிட்டி)

பரீட்சை ஆணையாளர் திரு குணபால விக்கிரமரத்ன யாழ். மாவட்டத்திற்கு விஜயம் செய்து இம்மாவட்டத்தில் க. பொ. த உயர்தரப் பரீட்சை நடைபெற்ற பரீட்சை நிலையங்களைப் பார்வையிட்டார்.

கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த ஆணையாளர் திரு. குணபால விக்கிரமரத்ன சனிக்கிழமை கொழும்பு திரும்பினார்.

# தென்ஆபிரிக்காமீது கட்டாயத் தடை

## ஐ. நா. பாதுகாப்புச் சபையில் பிரேரணை அமெரிக்கா 'வீட்டோ' செய்யும்

விஷ்பன், ஆக. 30

அங்கோலாவில் ஊடுருவல் நடத்திவரும் தென் ஆபிரிக்காவுக்கு சகலதுறைகளிலும் கட்டாயத் தடைவிதிக்கக் கோரும் பிரேரணை ஒன்று ஐக்கியநாடுகள் பாதுகாப்புச் சபையில் 15 மண்டல சார்பற்ற நாடுகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இப்பிரேரணைக்கு ஆபிரிக்க நாடுகளினதும் 3ம் உலக நாடுகளினதும் ஆதரவைச் சேகரிக்கும் முயற்சிகள் தற்போது நடைபெற்று வருகிறது.

தென் ஆபிரிக்காவுக்கு கட்டாயத்தடை விதிக்கவும் தென் ஆபிரிக்க படையெடுப்பினால் பாதிக்கப்பட்ட அங்கோலாவுக்கு தென் ஆபிரிக்காவிடமிருந்து நஷ்டஈடு பெறுவதற்கு கோரவும் இப்பிரேரணை வழிவகுக்கும் என ஐ. நா. பேச்சாளர் ஒருவர் கூறினார்.

இந்நிலை குறித்து மேலும் ஆராயும் பொருட்டு பாதுகாப்புச் சபை நாளை கூடுகிறது

அமெரிக்கா 'வீட்டோ' செய்யும்

இதே சமயம் இப்பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படும் போது அமெரிக்கா தனது "ரத்து" அதிகாரத்தைப் பயன்படுத்தி இப்பிரேரணை "வீட்டோ" செய்யும் என அறிவித்துள்ளது. (இ)

வெலிங்டன் [illegible]
தினசரி 2-30, 6-30
திசைமாறிய பறவைகள்

ராஜேம்ஸ் [illegible]
தினசரி 4-15, 7-00 9-30
THAT MAN'S BOLT

7-வது வெற்றி வாரம்
ஹரன் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு-சுஜாதா
நூல் வேலி
(கலர்)

வெலிங்டன்
தினசரி 4 காட்சி
BEYOND THE TOSBIDON ADVENTURE

[illegible]
தினசரி 4 காட்சிகள்
அலாவுதீனும் அற்புதவிளக்கும்

சாந்தி (யாழ்.நகர்) 10-30, 2-30, 6-00 & 9-45
சிவாஜி - எஸ். எஸ். ஆர். - தங்கவேலு
பத்மினி-எம். என். ராஜம்.
'தெய்வப் பிறவி'
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி

இன்று மட்டும்
மனோகரா (யாழ்ப்பாணம்) தினசரி 10-30 2-15, 6-15, 9-45
பாக்கியராஜ்-அருணா-[illegible] முருகன்
ஒரு கை ஓசை

வெற்றிகரமான 7-வது வாரம்
(யாழ்ப்பாணம்)
ராஜா தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
எம். ஜி. ஆர். லதா
பல்லாண்டு வாழ்க
(சினிமாஸ்கோப் கலர்)

3 வது வாரம்
ஒருபெண்ணுக்கு துணிவு இருந்தால்மட்டும் போதாது துணையும் வேண்டும் என்பதை சித்தரிக்கும் சித்திரம்தான்
வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
காமினி ஸ்ரீபிரியா ராதாசலூஜா தேங்காய் நம்பியார் நடித்த
நீலக்கடலின் ஓரத்திலே
(சினிமாஸ்கோப் கலர்)

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சுதாகர் பாக்கியராஜ் சுமதி மற்றும் பலர் நடித்த
சுவர் இல்லாத சித்திரங்கள்

ஸ்ரீதர் (யாழ் நகர்) தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
மஞ்சுபார்கவி துளசிராம்
சங்கராபரணம் (கலர்)

# இன்றைய பலன்

ஆவணி மாதம் 15-ம் திகதி திங்கட்கிழமை
(31 - 8 - 81)

மேடம்- வெளியிடத்துப் பயணம் மேற்கொள்ளப்படலாம் உடல்நலத்தைப் பேணவும் பகைமூட்டம் தோன்றும் பதட்டமும் உடன்சேரும்.

இடபம்- இதயம் இன்று இசைபதற்கு விம்மும் குடும்பத்தில் இன்று உறவுமுறைகள் மிகவும் அன்புகொண்டதாக இருக்கும் புத்திரர்களாலும் மதிப்பு உயர்வதற்கு இடமுண்டு சிறப்பான தினம்.

மிதுனம்- திரைமறைவில் சதித்திட்டம் உருவாகும் அடுத்துக் கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர் கடற்றொழிலாளர்கள் கவனம் செலுத்தவும் இலகுக்கு நூதன ரோகமும் தென்படலாம்.

கடகம்- உறவினர்கள் உதவிக்கு வருவர் வாழ்க்கையில் உற்சாகம் ஏற்படும் காதலர்கள் வாழ்வில் கனிவான நிகழ்ச்சிகள் இடம்பெறும் குதூகலமான தினம்.

சிம்மம்- தொழில் துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும் மேலதிகாரிகள் பாராட்டுதல்களுக்கு இலக்காவீர்கள் சிலர் வாழ்க்கையில் கடல் கடந்த பிரயாணமொன்றும் மேற்கொள்ளப்படலாம்.

கன்னி- முயற்சியின் மூலம் முதல் இடத்தைப் பிடித்துக் கொள்வீர்கள் பல வழிகளிலும் பணம் கைவந்துசேரும் உற்சாகமளிக்கும் செய்தி பொன்று கிடைக்கும் வியக்கத்தக்க சாதனை ஒன்று நிலைநாட்டலாம்.

துலாம்- பலவழிகளிலும் தொல்லைகள் தோன்றும் விரக்தி மனப்பான்மையுடன் நடமாடுவீர்கள் தொழில் புரியும் இடத்தில் எதிரிகள் மறைமுக நடவடிக்கைகளில் இறங்குவர் அவதானம் வேண்டும்.

விருட்சிகம்- அந்நிய வாசம் அமைதிக்கு உலைவைக்கும் அபாயகரமான காரியங்களில் ஈடுபடுபவர்கள் மிகவும் அவதானத்துடன் நடந்துகொள்ள வேண்டும். தெய்வநம்பிக்கை சிறந்த பலன் தரும்.

தனு- ஒளிமயமான சூழ்நிலை உருவாகும் வீட்டில் உள்ளவர்களின் அன்பும் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் திருமணம் கலந்தவர்கள் மத்தியில் இனிமையான சம்பவம் இடம்பெறும்.

மகரம்- பொறுமையின்றிழல் உங்களைத் தொடரும் உதவி செய்யப்போய் உபத்திரவத்தைத் தேடிக் கொள்வீர்கள் அரசபயத்துக்கு இடம் ஏற்படும் ஆகையால் வழக்கு விவகாரங்களில் ஈடுபடாதிருக்கவும்.

கும்பம்- நீண்ட பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம் தாய்வழிமூலம் பொருள் வரவுக்கு இடமுண்டு விவசாயிகளின் விளைபொருள் விருத்தியைக் குறிப்பிடுகின்றது உயர்வுண்டு.

மீனம்- சூதாட்டத்தின் மூலம் பெருந் தொகையை இழக்க நேரிடலாம் நண்பர்களுடனும் பகைத்துக் கொள்வீர்கள் மதுபானத்தைத் தவிர்த்து மனக்கட்டுப்பாட்டுடன் இருக்கவும்

சோதிடமணி
திருமதி
க. வேலுப்பிள்ளை

# கடையில் திருட்டு

(மன்னார்)

பேசாலையில் உள்ள கடை ஒன்றின் முன் கதவு உடைக்கப்பட்டு சுமார் ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டன, இத்திருட்டு சம்பந்தமாக மன்னார் பொலிசில் புகார் செய்யப்பட்டதைபடுத்து மன்னார் பொலிசார் புலன் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (க)

# மானிப்பாயில் நால்வர் விழா

(யாழ்ப்பாணம்)

நால்வர் பெருவிழா மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் கோவிலில் இன்று மாலை நடைபெறவிருக்கிறது நாயன்மார்களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனையும், திருமுறைக் கச்சேரியும் நடைபெறும். (க)

# வட இலங்கை

(4-ம் பக்க தொடர்ச்சி)

சிறப்புற பெற்ற அனுபவமே இதற்குக் காரணமாகும். இப்புதிய பாடவிதானம் நூல் உருவில் யாழ் கல்வித் திணைக்களத்தில் அமைந்துள்ள வட இலங்கைச் சங்கீத சபை அலுவலகத்தில் உள்ளது.

# உணவுப் பொருட்கள் பற்றிய மதிப்பீடு வேலைகள்

(புலோலி)

யாழ். மாவட்டத்திலுள்ள வீடுகள் தோறும் அன்றாடம் நுகரப்படும் சில உணவுப் பொருட்கள் பற்றிய மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கமத்தொழில் அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சின் பண்ட்புக் கமைய கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகத்தின் சந்தைப் பிரிவு இந்த மதிப்பீட்டைச் செய்துவருகின்றது.

மாதிரி அளவீடு ஒன்றின் மூலம் தேர்ந்த சில உணவுப் பண்டங்களின் நுகர்வினை மதிப்பீடுசெய்யும் இந்நடவடிக்கையில் யாழ். மாவட்டத்திலுள்ள சகல பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் ஆகிய மூன்றுமாதங்களுக்கும் இந்த நுகர்வுப் பண்டங்கள் பற்றிய அளவீடு மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு பயிர்ச்செய்கை உத்தியோகத்தரும் தத்தமது பகுதிகளில் பத்து வீடுகளைத் தெரிவு செய்து, தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு வீட்டிற்கும் கேள்விக்கொத்துக்களை விநியோகம் செய்து இம் மதிப்பீட்டை மேற்கொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நுகர்வுப் பண்டங்களின் மதிப்பீட்டின் நோக்கம், நுகர்வுபட்டங்களைப் பொறுத்துத் தேசிய உணவுக் கொள்கையை மதிப்பீடு செய்வதேயாகும் இன்றைய காலகட்டத்திலே நாட்டின் கமத்தொழிற்திட்டங்களுக்கு இது போன்ற நுகர்வுப் பண்டங்களின் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மிகமுக்கியமானதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# ஏட்டுப்படிப்பு வாழ்க்கைப்பாடமாக அமைய வெளிக்களமுயற்சி அவசியம்

(யாழ்ப்பாணம்)

ஏட்டுப்படிப்பு வாழ்க்கைப் பாடமாக மாறவேண்டுமானால் மாணவர்களுக்கு வெளிக்கள முயற்சிகள் இன்றி அமையாதனவாகும்.

இவ்வாறு மன்னார் புனித சவேரியார் மகளிர் கல்லூரி அதிபர் சங்கைக்குரிய சகோதரி எஸ். நிகோபஸ் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் உரையாற்றும்போது கூறினார்.

இப் பரிசளிப்பு விழாவில் மன்னார் மறைமாவட்ட முதல் ஆயரான பேரருட் திரு திரு. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

அதிபர் தமது உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது: மத அறிவில்லாத கல்வி அறிவு கற்றதனாலாயபயனென் கொல் என்ற விரக்தி நிலைக்குத் தள்ளிவிடக்கூடிய தொன்று. எனவே எமது பாடசாலை சமய அறிவை மாணவர்களுக்கு வழங்கி அதை வாழ்வாக மாற்ற முயற்சி எடுத்துவருகிறது.

எமது மாணவர்கள் அரசினால் வழங்கப்படும் புலமைப் பரிசில்களை பலதடவைபெற்று கல்லூரிக்குப் பெருமை தேடித்தந்துள்ளனர். அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற அதிசிறந்த மாணவர் போட்டியில் மன்னார்மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 5 மாணவிகளில் மூவர் எமது பாடசாலையைச் சேர்ந்தவர்கள் அதிலும் சிறந்த மாணவியாகத் தெரிவு செய்யப்பட்டு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றவிழாவில் தங்கப் பதக்கத்தையும் வெற்றிக் கிண்ணத்தையும் தட்டிச் சென்ற பெருமை செல்வி மடோனா சகிலா வேதநாயகத்தைச் சாரும்.

இவ்வருடம் மகளிர் தினத்தையொட்டி அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் முதலாம் இடத்தைப்பெற்ற மாணவி செல்வி பிரபாவதி சூசையாவும் எமது கல்லூரிக்கு பெருமை தேடித்தந்தார்.

எமது கல்லூரியின் முன்னேற்றத்திற்காக உழைத்து வரும் ஆசிரியர்களின் சேவையும் குறிப்பிடத்தக்கது (இ)

சுன்னாகம்

# சிவபூதராயர் சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் கோவில் அலங்கார உற்சவம் சென்ற 22-ம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறுகிறது.

இன்று திங்கட்கிழமை பகல் சங்காபிஷேகமும் அன்னதானமும் இரவு திருவூஞ்சலும் இடம்பெறும்.

10 நாட்களும் மாலை ஆசிரியர் சிவ. மகாலிங்கம் சொற்பொழிவாற்றி வருகிறார் இன்று இரவு தர்மசாஸ்திரா சபையினரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவார். (மா)

# கடல் பிராணியை காப்பாற்றுங்கள்

(மன்னார்)

இலங்கையிலேயே மன்னார் மாவட்டக் கடலில் மட்டும் பெருமளவு காணப்படும் ஆவுரியா எனும் கடல் பிராணி தற்போது குறைந்துவருகிறது.

இக் கடல் பிராணியை பாதுகாக்காது விட்டால் முற்றாக மறைந்து விடும் என்று நிலமை வன மிருகவள பாதுகாப்புச் சபைத் தலைவர் மன்னார் அரசாங்க அதிபர் திரு சுமிலஸ் பெர்னாண்டோ கேட்டுள்ளார்.

# கும்பாபிஷேகம்

நயினாதீவு தம்பலைப்பதி ஸ்ரீபத்திரகாளி அம்பாள் சமேத ஸ்ரீ வீரபத்திர பெருமான் ஆலய மகாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை நடைபெறவிருக்கிறது.

இன்றிரவு தமிழ்மொழி அரசி திருமதி வசந்தா வைத்தியநாதன் நாளை இரவு சிவஸ்ரீ கைலாசநாதக்குருக்கள் ஆகியோரின் சொற்பொழிவும், விசேஷ மேளக்கச்சேரியும் இடம்பெறும். கும்பாபிஷேக தினத்தன்று பகல் அன்னதானமும், இரவு விசேஷ நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (மா)

# விசேட உரை

(அரியாலை)

யாழ்ப்பாண கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்தின் ஆதரவில் அடுத்த மாதம் 8-ம் திகதி மாலை யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் நடைபெறும் விசேட கூட்டத்தில் கொழும்பு, பொரளை பரிசுத்த லூக்கா ஆலய சேகரக்குரு அருட்திரு. கெனத் பெர்னாண்டோ அடிகளார் 'சிறு தேசத்திலுள்ள கிறிஸ்தவ சபைகள்' என்ற விடயம் குறித்து விசேட சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். (க)

# விழா

(யாழ்ப்பாணம்)

இ. [illegible] இந்துநல கூட்டியக்கத்தின் அங்குரார்ப்பண விழா [illegible] செல்வச் சந்நிதி தெருவில் இன்று நண்பகல் நடைபெறவிருக்கிறது.

## இப்படியும் நடக்கிறது

இரவு சுமார் பதினொரு மணியிருக்கும்.
யாழ். நகரிலுள்ள அந்தப் பெரிய மண்டபத்தைக் காபந்து செய்பவர் வேலை முடிந்து தனிமையில் வீடு திரும்பிக்கொண்டிருந்தார்.
ஒட்டுமடச் சந்திக்கு அருகாமையில் அவர் திடீரெனச் சோதனைக்குள்ளாகினார்.
எத்தனையோ கேள்விகள். அவற்றைத் தொடர்ந்து அவரது 'ஷேர்ட்' பைக்குள்ளிருந்த சில நூறு ரூபாய்களும் பறிமுதல் செய்யப்பட்டன!
யாருக்கு யார் காவல்?

— ஊடுருவி

## மரண அறிவித்தல்
### திருமதி சி. இராசம்மா

திருமதி இராசம்மா சிவஞானபோதம் காலமாகிவிட்டார். இவர் சிவஞானபோதம் [ஸ்ரீ பார்வதி அச்சக ஸ்தாபகர்] அவர்களின் மனைவியும், திருமதி ரம்ணி, சி. ரவீந்திரன் [ஸ்ரீ பார்வதி அச்சக உரிமையாளர்], சி. மனோகரன் [லண்டன்], சி. சோமபாலன் [லண்டன்] ஆகியோரின் தாயாரும், ச. சதானந்தனின் [போஸ்] மாமியாருமாவார். அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு 31-8-81 திங்கட்கிழமை [இன்று] பிற்பகல் 4-00 மணிக்கு எடுத்துச்செல்லப்படும். [0792]

## லயனல் திருமலை அரச அதிபர்?

[திருகோணமலை]
முன்னாள் யாழ். அரசாங்க அதிபரும், 'தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபன தலைவருமான திரு லயனல் பெர்னாண்டோ திருகோணமலை அரசாங்க அதிபராக நியமிக்கப் படலாம் எனத் தெரியவருகிறது.

## நயினையில் இன்று வாலஸ்தானம்

[நயினாதீவு]
நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அம்பாள் கோவில் வாலஸ்தான கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் தென்வாசல் இராஜகோபுர நிலைக்கல் நாட்டும் வைபவமும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. நிலைக்கல்லை சமூகசேவையாளரும் வர்த்தகருமான திரு. எஸ் எஸ். பூபதி நாட்டிவைப்பார்.
இன்று காலை ஆரம்பமாகும் கிரியைகள், மறுநாளும் நடைபெற்று வாலஸ்தான கும்பாபிஷேகம் நடைபெறும் கிரியைகளை நயினை பிரதிஷ்டாபூஷணம் சிவஸ்ரீ சாமிநாத பரமேஸ்வரக்குருக்கள் நிறைவேற்றிவைப்பார். [இ]

## பண்டித வகுப்பு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
சங்கத்தின் செயலாளராக திரு. வெ. சபாநாயகம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் யாழ். மாவட்ட கல்வித்திணைக்களத்தில் நிர்வாக பிரதம கல்வி அதிகாரியாகக் கடமையாற்றி வருகிறார். இவர் முன்னர் பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் துணை அதிபராகக் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. [மா]

## தவறிவிட்டது

29 ஸ்ரீ 2008 'இந்திரன் ரூர்ஸ்' மினிபஸ்ஸின் ஸ்பெயர் ரயர், றிம்முடன் யாழ்-காங்கேசன் துறை வீதியில் தவறிவிட்டது. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
து. இந்திரகுமார். டச்றோட், உடுவில். 0794

## மரண அறிவித்தல்
### அரியநாயகம்

இளைப்பாறிய தபாலதிபரும், காலஞ்சென்ற நேசம் இராணி அவர்களின் அன்புக்கணவரும், லீலா சரவணமுத்து (உரோம்) நேசதுரை (லெசதோ) ஜோஜ் அரியநாயகம் [உடுப்பிட்டி], டாக்டர் சிங்கரட்னம், திருமதி இந்திராணி அருளையா, மகிமைராஜன் [இங்கிலாந்து], பிரேமி தனபாலசிங்கம் [நைஜீரியா], காலஞ்சென்ற குவீனி சண்முகநாதனின் அன்புத் தந்தையரும், திருமதி செல்வநாயகம் [கொழும்பு], திருவாளர் ஞானப்பிரகாசம் [பரியோவான்கல்லூரி, யாழ்ப்பாணம்], காலஞ்சென்ற திருமதி தம்பிராசா, திருமதி பொன்னுத்துரை அவர்களின் சகோதரனும் சென்ற சனிக்கிழமை அன்று கர்த்தருக்குள் இளைப்பாறினார்.
ஆவணி 31ம் திகதி திங்கட்கிழமை இயேசுநிலையத்தில் இருந்து பிற்பகல் 4-30 மணிக்கு தென்னிந்திய திருச்சபை சேமக்காலை உடுப்பிட்டியில் நல்லடக்கம் செய்யப்படுவார்.
0795


பழகப் பழகப் பணத்தைப் பெருக்கும்

# ஹோம் பினான்ஸை நினைவில் வையுங்கள்

திரவியம் தேடும் தருணம் இதுவே

# ஹோம் பினான்ஸ் லிமிட்.

82, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
போன்: 8310

ரூபா 1000 -க்கு மேற்பட்ட ஒருவருட வைப்பிற்கு ஆகக்கூடுதலான வருமானத்தை வழங்குகிறது.

**30%** வருட முடிவில் வட்டி பெறுவோர்க்கு வருடம் 25 % வீத வட்டியும் 3 % வீத போனஸும் 2 % வீத சேமிப்பும் ஆக மொத்தம் 30 % வீத வருமானம் வழங்கப்படும்.

**28%** மாதாமாதம் வட்டி பெறுவோருக்கு வருடம் 25 % வீத வட்டியும் வருட முடிவில் 3 % வீத போனஸும் ஆக மொத்தம் 28 % வீத வருமானம் வழங்கப்படும்.

இடைப்பட்ட காலத்தில் வைப்புப் பணத்தை மீளப்பெறுவோர்க்கு எதுவித வட்டிக் கழிவும் செய்யப்படமாட்டாது.

உங்கள் பணத்தை விவேகமாக முதலீடு செய்யுங்கள்.

ஹோம் பினான்ஸ் நம்பிக்கையின் இல்லம்

# ஹோம் பினான்ஸ் லிமிட்.

தலைமையகம்: 463, காலி வீதி, கொழும்பு-3
தொலைபேசி: 89190


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாடு' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 803ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஹு மீ ஆகஸ்ட் 31-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office: Sri Lanka. Regd. Q. B. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 889, 8126.